**<u>13.02.2025</u>** **<u>அசல் வழக்கு எண்.89/2013</u>**

**<u>வா.சா. 1</u>** **<u>திரு.அப்துல் முனாப். த/பெ.சையது ஜானி சாகிப்.</u>**

**<u>சாட்சிய சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி.</u>**

நான் தாக்கல் செய்துள்ள வா.த.சா.ஆ.7 ஆவணமானது முகமது அலி மகன் பர்கத் அலி ஜானி பாஷா மனைவி உறபுபுன்னிசா ஆகியோர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். தற்போது என் பெயரில் உள்ளது. வா.த.சா.ஆ.13 ஆவணத்தில் வண்ண மையினால் தீட்டப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ள பகுதியானது யாரால் அவ்வாறு செய்யப்பட்டது என்றால் சர்வேயரால் அவ்வாறு செய்யப்பட்டுள்ளது. என்னுடைய விண்ணப்பத்தின்பேரில் சர்வேயர் அந்த இடத்திற்கு வந்து பார்த்து அளந்து அதன் பின்பு அவ்வாறு ஆவணத்தை வழங்கினாரா என்றால் ஆமாம். நான் கேட்டுக்கொண்டதன்பேரில் தான் அவ்வாறு அளந்து கொடுத்தார்கள் என்றால் சரி தான். பிரதிவாதிகள் எவ்வளவு பரப்பளவு கொண்ட இடத்தை ஆக்ரமிப்பு செய்தார்கள் என்று தாவா பி செட்டியுலில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. சுமார் 800 சதுரடி அளவில் ரோடு புறம்போக்கை ஆக்ரமிப்பு செய்துள்ளார்கள். அதன் சர்வே எண்.36 ஆகும். ஏன் தாவாவில் அவ்வாறு 800 சதுரடி இடத்தை பிரதிவாதிகள் ஆக்ரமிப்பு செய்தார்கள் என்று குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிடவில்லை அவ்வளவு தான். நான் தாக்கல் செய்துள்ள வா.த.சா.ஆ.15 ஆவணத்தில் 400 சதுரடி இடத்தில் ஆக்ரமிப்பு செய்துள்ளதற்கு பட்டா வழங்கக்கூடாது என்று கோட்டாட்சியருக்கு மனு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அது ஒரு பகுதியாகும். எந்த பகுதியை 400 சதுரடி இடம் என்று தாவா பி செட்டியுலில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் வீட்டையும் அதை ஒட்டியுள்ள பகுதியையும் குறிப்பிட்டுள்ளேன். வா.த.சா.ஆ.16 ஆவணமான நான் காவல்நிலையத்திற்கு அளித்திருந்த புகார் மனுவில் பட்டா நிலம் ஆக்ரமணம் என்று குறிப்பிட்டு அந்த புகார் மனு பொருளில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த மனுவில் என்னுடைய வீட்டு வாசற்படியாக சென்று வர சுமார் 80 வருட காலமாக முற்றமாக பயன்படுத்தப்பட்டு வந்த 832 சதுரடி அளவு கொண்ட நிலத்தினை அதே மனைக்கு அருகில் சர்க்கார் புறம்போக்கு டி.எஸ்.எண்.36 கிராம நத்தம் சாலை புறம்போக்கில் குடியிருக்கும் சோட்டிமாபி க/பெ. அலி ஜான் சாயுபு என்பவர் ஆக்ரமணம் செய்து அதில் இரண்டு அடுக்கு மெத்தை கட்டி குடியிருந்து வருகிறார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். காவல்நிலையத்தில் கொடுத்த மனுவில் 832 சதுரடி தான் ஆக்ரமிப்பு செய்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி தான். அந்த 832 சதுரடி இடமானது நான் கடந்த 10.05.2012தேதியில் ரியாசத் அலி

வகையறாவிடமிருந்து கிரயம் பெற்ற நிலத்திற்கு வடக்கு பகுதியில் உள்ள இடம் என்றால் ஆமாம். வடக்கு புறத்தில் உள்ள புறம்போக்கு பகுதியாகும். நான் வேண்டுமென்றே அந்த பகுதியை புறம்போக்கு பகுதி என்று பொய்யாக கூறுகிறேன் என்றாலும், அது பட்டா நிலம் என்றாலும் சரியல்ல. வா.த.சா.ஆ.16 புகார் மனுவின் நகலை தான் வா.த.சா.ஆ.20ல் குறிப்பிட்டுள்ளவாறு கோட்டாட்சியருக்கு மனு அளித்துள்ளேன் என்றால் சரிதான். வா.த.சா.ஆ.23 ஆவணத்தின் நகல் தான் வா.த.சா.ஆ.13 என்றால் சரியல்ல. இரண்டும் வெவ்வேறானவை. வா.த.சா.ஆ.24 ஆவணத்தில் கோட்டாட்சியர் எனக்கு அனுப்புள்ள கடிதத்தில் என்னுடைய மனு நாள் 12.02.2013 என்று குறிப்பிட்டுள்ள மனுவை நான் மேற்படி ஆவணத்துடன் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வேண்டுமென்றே நான் அனுப்பிய மனுவில் உள்ள சங்கதிகளை தெரியப்படுத்தக்கூடாது என்பதற்காக அந்த மனுவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.25 ஆவணமானது நான் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கேட்டு பெறப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் எனக்கு இரண்டு தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த இரண்டு தகவல்களிலும் அது அசல் ஆவணத்தில் இருந்து எடுக்கப்பட்டது என்பதை குறிப்பதற்காக பேனா மையினால் கையெழுத்து செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் மூன்றாவதாக தாக்கல் செய்துள்ள ஆவணமானது நகல் தான் என்றாலும், அதன் அசல் என்னிடம் உள்ளது என்றாலும் சரிதான். அந்த அசலை நான் ஏன் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அந்த ஆவணமானது என்னால் ஜோடனை செய்யப்பட்டது என்பதால் தான் அந்த அசல் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.27 மற்றும் 28 ஆவணங்கள் நான் அனுப்பிய புகாரின்பேரில் அரசு அதிகாரிகள் எனக்கு அனுப்பியிருந்த ஆவணங்கள் என்றால் சரிதான். நான் என்ன புகாரினை அனுப்பினேன் என்பதை காண்பிக்கக்கூடிய வகையில் அந்த புகாரின் நகல்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது இவ்வழக்கு சம்பந்தமானது அல்ல என்பதால் நான் தாக்கல் செய்யவில்லை. வா.த.சா.ஆ.27 ஆவணத்தில் பொருள் என்ற இடத்தில் அப்துல் முனாப் த/பெ. சையத் ஜானி என்பவர் டவுன் சர்வே எண்.36ல் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தினை ஆக்ரமிப்பு செய்துள்ள திருமதி. சோட்டிமா பி என்பவரிடமிருந்து இடத்தை மீட்டு தரக்கோரி கொடுத்துக்கொண்ட மனு தொடர்பாக என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.த.சா.ஆ.28 ஆவணத்தில் பொருள் என்ற இடத்தில் அப்துல் முனாப் என்பவர் அரசுக்கு சொந்தமான நகர புல எண்.36 ரோடு புறம்போக்கை சோட்டிமாபி

க/பெ.அலிஜான் சாயுபு என்பவர் பட்டா நிலத்திற்கு எதிராக உள்ள இடத்தினை ஆக்ரமணம் செய்துள்ளதை அகற்ற கோரியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி இரண்டு ஆவணங்களின்படி என்னுடைய நோக்கமானது புறம்போக்கு இடத்தில் உள்ள ஆக்ரமிப்பை அகற்ற கோருவது தான் என்றால் பட்டாதாரர்கள் அவர்களது இடத்திற்கு போகவேண்டும் என்பது தான் என்னுடைய நோக்கமாக இருந்தது. நான் கொடுத்த புகார் மனுவின்பேரில் வட்டாட்சியர் 07.03.2015ஆம் தேதியன்று வந்து ஆக்ரமிப்புகளை அகற்றிவிட்டார்கள் என்றால் சரிதான். அவ்வாறு ஆக்ரமிப்புகளை அகற்றியது சம்பந்தமாக வட்டாட்சியர் எனக்கு கடிதம் அனுப்பியிருந்தார் என்றாலும், அதை நான் என் தரப்பு சான்றாவணமாக வா.த.சா.ஆ.29 ஆக குறியீடு செய்துள்ளேன் என்றாலும் சரிதான். 07.03.2015-க்கு பிறகு பிரதிவாதிகள் ஆக்ரமிப்பு ஏதேனும் செய்துள்ளார்களா என்றால் ஏற்கனவே அவர்கள் ஆக்ரமிப்பு செய்ததை முழுமையாக அகற்றவில்லை. அந்த ஆக்ரமிப்பு அப்படியே தான் உள்ளது. ஏற்கனவே வட்டாட்சியர் ஆக்ரமிப்புகளை காலி செய்துவிட்டதாக கடிதம் அனுப்பியுள்ளார் என்றால் இரண்டு பகுதிகளாக ஆக்ரமிப்பு செய்திருந்தனர். கட்டிடம் கட்டி ஆக்ரமிப்பு செய்த பகுதிகளை பொறுத்து நாங்கள் எதுவும் செய்யவில்லை. காலி இடத்தில் பட்டா இடத்திற்கு செல்வதை ஆக்ரமிப்பு செய்வது சம்பந்தமாக மட்டும் தான் புகார் கொடுத்திருந்தோம். நான் தாவாவில் அவ்வாறு இரண்டு பகுதிகளாக ஆக்ரமிப்பு செய்துள்ளதை பற்றி தனித்தனியாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் ஆக மொத்தத்தில் அவை அனைத்தும் ஒரே ஆக்ரமிப்பு தான். வா.த.சா.ஆ.14 ஆவணத்தில் என்னுடைய நிலத்திற்கு எதிரில் சர்க்காருக்கு சொந்தமான சாலை புறம்போக்கு நிலத்தில் பிரதிவாதிகள் வீடு கட்டி ஆக்ரமிப்பு செய்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் மேற்படி புகார் கொடுத்த நாளில் அந்த வீடு இருந்தது என்றாலும், தற்போதும் சர்வே எண்.36ல் சாலை புறம்போக்கில் வீடு உள்ளது. வா.த.சா.ஆ.14 முன்னிலைக்கு கட்டிடம் கட்டி ஆக்ரமிப்பு செய்திருந்த பகுதிகளை பொறுத்து நாங்கள் எதுவும் செய்யவில்லை என்று ஏற்கனவே சாட்சியம் அளித்துவிட்டு, தற்போது சர்க்காருக்கு சொந்தமான சாலை புறம்போக்கு நிலத்தில் பிரதிவாதிகள் வீடு கட்டி ஆக்ரமிப்பு செய்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் அந்த சமயத்தில் வீடு கட்டி ஆக்ரமிப்பு செய்ததை மட்டும் தான் நாங்கள் அகற்ற கோரியிருந்தோம். காலி இடத்தில் நாங்கள் போய் வந்துக்கொண்டு இருந்தோம். பின்னர் காலி இடத்தையும் ஆக்ரமிப்பு செய்துவிட்டார்கள். காலி இடத்தை எப்போது ஆக்ரமிப்பு செய்ததாக கூறுகிறேன் என்றால் 2012ஆம் ஆண்டு ஆக்ரமிப்பு செய்தார்கள் என்று கூறுகிறேன். அந்த காலி இடமானது நான்

ரியாசத் அலி வகையறாவிடமிருந்து கிரயம் பெற்ற சொத்திற்கு வடக்கு புறத்தில் உள்ளது என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ஒம்/-ஆர்.பாக்யராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி. (மு.கூ.பொ)